# விவேகானந்த கல்லூரி

(பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்சார் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது)
மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைந்த தன்னாட்சி பெற்ற குருகுல வாழ்க்கைப் பயிற்சி நிறுவனம்
தேசிய தர நிர்ணயக் குழுவினரால் (NAAC) ‘A’ கிரேடு மறு மதிப்பீடு செய்யப் பெற்றது (CGPA 3.59 out of 4.00)
(மேலாண்மை: ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம்)
திருவேடகம் மேற்கு – 625 234, மதுரை மாவட்டம், தமிழ்நாடு
இணையதளம்: www.vivekanandacollege.org மின்னஞ்சல்: principal@vivekanandacollege.org

04543-258234, 258334
நிகரி : 04543-258358





சுவாமி நியமானந்த
செயலர்

முனைவர் சி.இராஜா
முதல்வர்


# குருகுலச் சுடர்


கல்வியாண்டு 2017-18

சுடர் : 2

ஜூலை 2017


**அன்புடையீர்,**

வணக்கம். குருகுலம் இனிதே நடைபெற்று வருகின்றது. கடந்த ஜூலை 2017ல் நடந்த நிகழ்ச்சிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

**குருகுலம் சம்பந்தமானது**

03.07.2017, 10.07.2017 17.07.2017, 24.07.2017, 31.07.2017 ஆகிய திங்கட்கிழமைகளில் காலை 8.10 மணிக்கு கல்லூரியில் தேசியக் கொடியேற்றம் நடைபெற்றது.

01.07.2017, 08.07.2017, 15.07.2017, 22.07.2017, 29.07.2017 ஆகிய சனிக்கிழமைகளில் மாலை 6.00 மணி முதல் 6.45 மணி வரை கல்லூரியின் பிரார்த்தனைக்கூடத்தில் பஜனை சிறப்பாக நடைபெற்றது.

05.07.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற மாணவர்களின் மாதாந்திர தேவை அறிதல் கூட்டத்தில் மாணவர்கள் தங்கும் அறையின் முதல் எண் மாணவர்கள், மாணவப் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டு தங்களது தேவைகளைத் தெரிவித்தனர். இக்கூட்டத்தில் கல்லூரி செயலர், முதல்வர், துணைமுதல்வர், தேர்வுக்கட்டுப்பாட்டாளர் மற்றும் முதன்மையர், தேவை அறிதல் கூட்ட பொறுப்பாசிரியர்கள், நூலகர், மற்றும் உணவுக்கூட மேலாளர் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களின் தேவைகளைக் கேட்டறிந்தனர்.

06.07.2017 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை கல்லூரியின் பிரார்த்தனைக்கூடத்தில் அகதர உத்தரவாதக் குழுவால் நடத்தப்பெற்ற மாணவர் மேம்பாட்டு நிகழ்ச்சியில் விருதுநகர் வட்டாட்சியர் திரு.K.மாரிமுத்து கலந்துகொண்டு ‘போட்டித்தேர்வுகளின் மூலம் சிறந்த எதிர்காலம்’ என்ற தலைப்பில் போட்டித் தேர்வுகளுக்குத் தயார் செய்வது குறித்து மூன்றாமாண்டு மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார்.

04.07.2017 அன்று R.தனபால் (II Che) மற்றும் 06.07.2017 அன்று B.முருகேசன் (III Bot), C.பிரசாந்த் (III Zoo) ஆகியோர் தங்கள் பிறந்தநாளை கல்லூரியின் பிரார்த்தனைக்கூடத்தில் விளக்கேற்றி கொண்டாடினர். கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா மாணவர்களுக்கு பிறந்தநாள் பரிசு வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

04.07.2017 அன்று மாலை 6.30 மணிக்கு சுவாமி விவேகானந்தரின் நினைவுநாள் சிறப்புசொற்பொழிவில் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் R.வன்னியராஜன் கலந்துகொண்டு முதலாமாண்டு மாணவர்களிடையே சொற்பொழிவாற்றினார். முதல்வர் முனைவர் S.இராஜா நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

10.07.2017 அன்று பிற்பகல் 1.10 மணிக்கு முதல்வர் அலுவலகத்தில் Student Welfare and Extra Curricular Committee கூட்டம் நடைபெற்றது. இதில் முதல்வர், துணைமுதல்வர், முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர், அக தர உத்தரவாதக்குழு ஒருங்கிணைப்பாளர், அலுவலகக் கண்காணிப்பாளர், ஆசிரிய பிரதிநிதிகள் மற்றும் மாணவ உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் மாணவர் நலனை மேம்படுத்துதல் குறித்து ஆலோசிக்கப்பட்டன.

11.07.2017 அன்று பிற்பகல் 1.10 மணிக்கு முதல்வர் அலுவலகத்தில் Library Committee கூட்டம் நடைபெற்றது. இதில் முதல்வர், துணைமுதல்வர், முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர், அக தர உத்தரவாதக்குழு ஒருங்கிணைப்பாளர், நூலகர், அலுவலகக் கண்காணிப்பாளர், ஆசிரிய பிரதிநிதிகள் மற்றும் மாணவ உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் நூலகப் பயன்பாட்டினை அதிகரித்தல், நூலக கணினிமயமாக்கம் மற்றும் புதிய புத்தகங்கள் வாங்குதல் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டன.

12.07.2017 அன்று பிற்பகல் 1.10 மணிக்கு முதல்வர் அலுவலகத்தில் Sports Committee கூட்டம் நடைபெற்றது. இதில் முதல்வர், துணைமுதல்வர், முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர், அக தர உத்தரவாதக்குழு ஒருங்கிணைப்பாளர், உடற்கல்வி இயக்குநர், அலுவலகக் கண்காணிப்பாளர், ஆசிரிய பிரதிநிதிகள் மற்றும் மாணவ உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் உடற்கல்வித்துறைக்கு புதிதாக வாங்கவேண்டிய பொருட்கள், உடற்கல்வித்துறை மேம்பாடு முதலியன குறித்து ஆலோசிக்கப்பட்டன.

13.07.2017 அன்று பிற்பகல் 1.10 மணிக்கு முதல்வர் அலுவலகத்தில் Appeal and Grievance Committee கூட்டம் நடைபெற்றது. இதில் முதல்வர், துணைமுதல்வர், முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர், அக தர உத்தரவாதக்குழு ஒருங்கிணைப்பாளர், உடற்கல்வி இயக்குநர், அலுவலகக் கண்காணிப்பாளர், ஆசிரிய பிரதிநிதிகள் மற்றும் மாணவ உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் மாணவர்களுக்கான வசதிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டன.

14.07.2017 அன்று பிற்பகல் 1.10 மணிக்கு முதல்வர் அலுவலகத்தில் Students Guidance and Councelling Committee கூட்டம் நடைபெற்றது. இதில் முதல்வர், துணைமுதல்வர், முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர், அக தர உத்தரவாதக் குழு ஒருங்கிணைப்பாளர், மாணவர்களுக்கான ஆலோசகர்கள், அலுவலகக் கண்காணிப்பாளர், ஆசிரிய பிரதிநிதிகள் மற்றும் மாணவ உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் மாணவர்களின் பிரச்சினைகள், அவற்றிற்கு வழங்கவேண்டிய மனநல ஆலோசனைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டன.

14.07.2017 அன்று இரவு கல்லூரி உணவகத்தில் மாதாந்திர விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாணவர்களுடன் கல்லூரி செயலர், முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் கலந்துகொண்டு விருந்தினை ஏற்றனர்.

18.07.2015 அன்று காலை 8.30 மணிக்கு இக்கல்வியாண்டின் முதல் பருவத்திற்கான சான்றிதழ் படிப்பு வகுப்புகள் ஆரம்பமாயின.

21.07.2017 அன்று மாலை 6.30 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நரேன் IAS அகாடமியால் நடத்தப்படும் நரேன் வினாடிவினா போட்டியில் கலந்துகொள்வதற்கான நுழைவுத்தேர்வு நடைபெற்றது. இதில் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் 143பேர் கலந்துகொண்டு தேர்வெழுதினர்.

22.07.2017 அன்று இந்திய விடுதலைப் போராட்ட வீரர் பாலகங்காதர திலகரின் பிறந்த தினத்தினை முன்னிட்டு K.ரவிக்குமார் (III Mat) திலகரின் வரலாறு குறித்து சொற்பொழிவாற்றினார். கல்லூரி செயலர் சுவாமி நியமானந்த மாணவரைப் பாராட்டி பரிசு வழங்கினார்.

26.07.2017 அன்று காலை கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் விலங்கியல்துறைத் தலைவர் முனைவர் P.ராஜேந்திரன் மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர் T.ரமேஷ் இணைந்து தொகுத்த ‘Environmental Studies – சுற்றுச்சூழல் கல்வி’ புத்தகத்தினை கல்லூரி செயலர் சுவாமி நியமானந்த வெளியிட கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா பெற்றுக்கொண்டார். முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர் முனைவர் P.ராஜேந்திரன் புத்தகம் குறித்து விவரித்தார். கல்லூரியின் அக தர உத்தரவாதக் குழு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் V.பார்த்தசாரதி நன்றியுரை வழங்கினார்.

28.07.2017 அன்று மாலை 4.30மணிக்கு ஒலி-ஒளி அரங்கில் Anti-ragging Committee கூட்டம் நடைபெற்றது. இதில் முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர், அக தர உத்தரவாதக் குழு ஒருங்கிணைப்பாளர், ஆசிரிய பொறுப்பாளர்கள், பெற்றோர் பிரதிநிதிகள், மாணவப்பிரதிநிதிகள் மற்றும் பிற உறுப்பினர்கள் கலந்துகொண்டு ஆலோசனை மேற்கொண்டனர்.

31.07.2017 அன்று கரூர், ஸ்ரீசாரதா நிகேதன் பெண்கள் கல்லூரியின் அக தர உத்தரவாதக் குழுவின் சார்பாக நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா கலந்துகொண்டு ‘Human Rights and Weaker Sections in India’ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**பொருளியல் துறை**

06.07.2017 அன்று கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற ‘OIKOS MEET’ மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வரவேற்புரை, நன்றியுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பு ஆகியவற்றை இரண்டாமாண்டு மாணவர்கள் மேற்கொண்டனர். கட்டுரை வாசித்தல், வினாடிவினா, Who Am I?, செய்திகள் வாசித்தல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) ஆகியற்றை மூன்றாமாண்டு மாணவர்கள் நிகழ்த்தினர். இந்நிகழச்சியில் இயற்பியல்துறை உதவிப்பேராசிரியர் N.S.லட்சுமிகாந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்திப் பேசினார்.

11.07.2017 அன்று கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற ‘OIKOS MEET’ மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் இரண்டாமாண்டு மாணவர்கள் வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினர், மேலும் நிகழ்ச்சியின் இறுதியில் நன்றியுரை வழங்கினர். மூன்றாமாண்டு மாணவர்கள் கட்டுரை வாசித்தல், வினாடிவினா, Who Am I?, செய்திகள் வாசித்தல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) ஆகிய நிகழ்வுகளை நிகழ்த்தினர். இந்நிகழச்சியின் சிறப்பு விருந்தினர் முனைவர் G.பொன்ராஜ், விலங்கியல்துறை இணைப்பேராசிரியர் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்திப் பேசினார்.

18.07.2017 அன்று பிற்பகல் 2.00 மணிமுதல் 4.00 மணிவரை நடைபெற்ற விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் மதுரை காமராசர் பல்கலைக்கழக சூழலியல் பொருளியல் துறைத்தலைவரும் இணைப்பேராசிரியருமான முனைவர் D.சாமிக்கண்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு ‘சரக்கு மற்றும் சேவை வரி: ஒரு பொருளாதார மாற்றம்? அல்லது சமூக மாற்றம்?’ என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பொருளியல்துறைத் தலைவர் முனைவர் P.பட்டினத்தார் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா தலைமையுரையாற்றினார். கல்லூரி செயலர் சுவாமி நியமானந்த ஆசியுரை வழங்கினார். உதவிப்பேராசிரியர் A.சதீஷ்பாபு நன்றி தெரிவித்தார்.

25.07.2017 அன்று கல்லூரி ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற ‘OIKOS MEET’ மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் மூன்றாமாண்டு மாணவர்கள் கட்டுரை வாசித்தல், வினாடிவினா, Who Am I?, செய்திகள் வாசித்தல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) ஆகிய நிகழ்வுகளை நிகழ்த்தினர். இரண்டாமாண்டு மாணவர்கள் வரவேற்புரை, நன்றியுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பு ஆகியவற்றை வழங்கினர். இயற்பியல்துறை இணைப்பேராசிரியர் முனைவர் P.ஜெயசங்கர் இந்நிகழச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்திப் பேசினார்.

28.07.2017 அன்று திண்டுக்கல் A.R.மேலாண்மை கல்லூரியில் நடைபெற்ற தொழில்முனைவோர் மேம்பாடு குறித்த ஒருநாள் பயிற்சிப்பட்டறையில் மூன்றாமாண்டு மாணவர்கள் 6பேர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

31.07.2017 அன்று கரூர், ஸ்ரீசாரதா நிகேதன் பெண்கள் கல்லூரியின் அக தர உத்தரவாதக் குழுவின் சார்பில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் A.சதீஷ்பாபு கலந்துகொண்டார்.

**வரலாற்றுத்துறை**

01.07.2017 அன்று மூன்றாமாண்டு மாணவர்கள் 40பேர், துறைத்தலைவர் முனைவர் ந.நாகேந்திரன், மற்றும் உதவிப்பேராசிரியர் வீ.முருகன் ஆகியோர் இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளத்தில் நடைபெறும் அகழ்வாராய்ச்சியைக் காணச்சென்றனர். மேலும் இராமநாதபுரம் அரண்மனை, வைகையாறு கடலில் கலக்கும் முகத்துவராப்பகுதி ஆகிய வரலாற்றுத் தலங்களைக் கண்ணுற்றனர்.

20.07.2017 அன்று இரண்டாமாண்டு மற்றும் மூன்றாமாண்டு மாணவர்கள், துறைத்தலைவர் முனைவர் ந.நாகேந்திரன் மற்றும் உதவிப்பேராசிரியர் வீ.முருகன் ஆகியோர் மதுரை திருமலைநாயக்கர் மஹாலுக்குச் சென்றனர். அங்கு புராதன வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பது குறித்த பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

**வணிகவியல் துறை**

03.07.2017 அன்று மதுரை E.M.G. யாதவர் மகளிர் கல்லூரியின் தேர்வுக்கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தில் நடைபெற்ற துணைத்தேர்வு விடைத்தாள்கள் திருத்தும் பணியில் இணைப்பேராசிரியர் முனைவர் S.பசுபதி புறத்தேர்வராகக் கலந்துகொண்டார்.

08.07.2017 அன்று துறையின் கருத்தரங்கக்கூடத்தில் Research Colloquim நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் துவக்கவிழாவில் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கூடுதல் தேர்வுக்கட்டுப்பாட்டாளர் முனைவர் J.விஜயதுரை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு துவக்கவுரை நிகழ்த்தினார். பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த ஆராய்ச்சி மாணவ மாணவியர் தங்கள் முனைவர் பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். மதுரை சரஸ்வதி நாராயணன் கல்லூரி இணைப்பேராசிரியர் முனைவர் K.ஜெயக்கொடி மற்றும் மதுரைக் கல்லூரி வணிகவியல்துறைத் தலைவர் முனைவர் A.மயில்முருகன் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டு மாணவ மாணவியரின் ஆராய்ச்சி விளக்கங்களைக் கேட்டு அவற்றை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளைக் கூறினர். அன்று மாலை நடைபெற்ற நிறைவுவிழாவில் முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பட்டாளர் முனைவர் P.ராஜேந்திரன் நிறைவுரை நிகழ்த்தி பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்.

11.07.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் மாணவர்களுக்கான மென்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. Weekly News Bulletin, வணிக வினாடி-வினா, Who Am I?, கட்டுரை வாசித்தல், வணிகச்செய்திகள் ஆகியன மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன. மேலும் மாணவர்கள் வரவேற்புரை, நன்றியுரை வழங்கியதுடன் நிகழ்ச்சியினை சிறப்பாக ஒருங்கிணைத்தனர். இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக வணிகவியல்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் C.வடிவேல் கலந்துகொணடார்.

14.07.2017 அன்று தொழிற்படிப்புகளான CA, CMA, CS ஆகியவை குறித்து கல்லூரி மாணவர்களுக்கான ஒருநாள் புத்தாக்கப் பயிற்சி நடத்தப்பட்டது. இதன் துவக்கவிழாவில் பட்டயக் கணக்காளர் R.ஜெகதீசன், Chairman, ICAI, Madurai சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு துவக்கவுரை நிகழ்த்தினார். மேலும் CA. T.பாலசுப்ரமணியன், Chairman, ICAI, Madurai, CMA.S.குமாரராஜன், Chairman, ICAI, Madurai, CS.T.நாகசுந்தரம், ICSI, Madurai, திரு.T.ராஜா, ICSI, Madurai ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டு மேற்கண்ட தொழிற்படிப்புகள், அவற்றிற்கான வேலைவாய்ப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்து மாணவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர். அன்று மாலை நடைபெற்ற நிறைவுவிழாவில் CA.P.பரணீதரண், பட்டயக் கணக்காளர், பெங்களூரு கலந்துகொண்டு நிறைவுரை நிகழ்த்தி மாணவ மாணவியருக்கு சான்றிதழ்கள் வழங்கினார். இதில் பல்வேறு கல்லூரிகளின் மாணவ மாணவியர் கலந்துகொண்டனர்.

19.07.2017 அன்று இணைப்பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன், V.V.வன்னியபெருமாள் மகளிர் கல்லூரியின் வணிகவியல்துறையில் நடைபெற்ற விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் (Guest Lecture Programme) சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு ‘வணிகவியல் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகள்’ என்ற தலைப்பில் மாணவியரிடையே உரையாற்றினார்.

19.07.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் மாணவர்களுக்கான மென்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. வரவேற்புரையுடன் நிகழ்ச்சிகளைத் துவக்கிய மாணவர்கள் Weekly News Bulletin, வணிக வினாடி-வினா, Who Am I?, கட்டுரை வாசித்தல், வணிகச்செய்திகள் வாசித்தல் ஆகிய நிகழ்ச்சிகளை சிறப்பாக ஒருங்கிணைத்ததுடன் நன்றியுரை வழங்கினர். இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக இயற்பியல்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் N.மீனாட்சிசுந்தரம் கலந்துகொண்டு நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

20.07.2017 அன்று திண்டுக்கல் மாவட்டம் அம்பிளிக்கை, புனித ஜேக்கப் நினைவு கிறித்துவக் கல்லூரியின் வணிகவியல் துறையில் ‘வணிகவியல் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு’ என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பயிற்சிப்பட்டறையில் உதவிப்பேராசிரியர் முனைவர் க.செல்லப்பாண்டியன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

25.07.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற மாணவர்களுக்கான மென்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வரவேற்புரை, Weekly News Bulletin, வணிக வினாடி-வினா, Who Am I?, கட்டுரை வாசித்தல், வணிகச்செய்திகள் வாசித்தல், நன்றியுரை, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு ஆகிய அனைத்து நிகழ்வுகளையும் மாணவர்களே சிறப்பாக நடத்தினர். பொருளியல்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் M.அருள்மாறன் இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

28.07.2017 அன்று முதலாமாண்டு, இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மதுரை, ஆவின் பால்பண்ணை மற்றும் அஞ்சலி நல்லெண்ணெய் நிறுவனங்களுக்குச் சென்று பல்வேறு பால், பால்பொருட்கள் தயாரித்தல், எண்ணெய் உற்பத்தி, மற்றும் பேக்கிங் ஆகிய பல்வேறு செயல்பாடுகளைப் பார்வையிட்டு அவை குறித்த விவரங்களைக் கேட்டறிந்தனர்.

31.07.2017 அன்று சிவகாசி, ஸ்ரீகுசு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சரக்கு மற்றும் சேவை வரியின் தாக்கம்’ தொடர்பான விவாதம், கட்டுரை வாசித்தல் மற்றும் நாடகம் ஆகிய போட்டிகளில் வணிகத்துறை மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் விவாதப்போட்டியில் முதலாண்டு மாணவர் பவானிசிங் இரண்டாம் பரிசு பெற்றார்.

**கணிதத்துறை**

13.07.2017 அன்று கணிதத்துறையில் நடத்தப்பட்ட ‘Math-E-Club’ மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் கணிதமேதை சகுந்தலாதேவி பற்றிய விவரங்கள் கூறப்பட்டன. K.ரவிக்குமார் (III Mat) Quiz, Dump Charade, Jumbled letters, Pictures Drawing ஆகிய கணிதம் சார்ந்த போட்டிகளுடன் வரவேற்புரை, நன்றியுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பு ஆகியவை மாணவர்களால் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியில் துறைத்தலைவர் மற்றும் துறைப்பேராசிரியர்கள் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

20.07.2017 அன்று கணிதத்துறையில் நடைபெற்ற 'Math-E-Club' மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வரவேற்புரை, அறிவியல் அறிஞர் ஐசக்-நியூட்டனின் கண்டுபிடிப்புகள் பற்றிய சொற்பொழிவு, கணிதம் சார்ந்த Quiz, Dump Charade, Jumbled letters, Pictures Drawing ஆகிய போட்டிகள், நன்றியுரை மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு ஆகிய நிகழ்வுகள் மாணவர்களால் சிறப்பாக நடத்தப்பட்டன. நிகழ்ச்சிகளை துறைத்தலைவர் மற்றும் துறைப்பேராசிரியர்கள் வழிநடத்தினர்.

**இயற்பியல் துறை**

06.07.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் கல்லூரியின் இயற்பியல் கழகக் கூட்டம் மற்றும் சிறப்பு விரிவுரை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சீனாவின் ஜியாங்சு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் முனைவர் பாஸ்கர் தங்கராஜ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'Biodiesel: An Alternative Fuel for the Future' என்ற தலைப்பில் விரிவாக உரையாற்றினார். மேலும் மூன்றாமாண்டு மாணவர்களிடையே ஆராய்ச்சி மற்றும் மேற்படிப்பு குறித்து உரையாற்றினார்.

மூன்றாமாண்டு மாணவர் N.விஜயமணி 08.05.2017 முதல் 03.07.2017 வரையிலான 57 நாட்கள் குஜராத், ஆனந்த் மாவட்டத்தின் வல்லபாய் வித்யா நகர், சர்தார் பட்டேல் பல்பலைக்கழகத்தில் பேராசிரியர் P.C.வினோத்குமார் வழிகாட்டுதலின்படி கோடைக்கால ஆராய்ச்சியை மேற்கொண்டார்.

13.07.2017 அன்று துறையின் கருத்தரங்க அறையில் 'Thursday Meet' மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி மூன்றாமாண்டு மாணவர்களால் நடத்தப்பட்டது. வரவேற்புரையுடன் துவங்கிய நிகழ்ச்சியில் திருக்குறள் மற்றும் அதன் தெளிவுரை, இயற்பியல் விதி பற்றிய சொற்பொழிவு, Connections, வினாடிவினா, நன்றியுரை ஆகிய நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன. மேலும் மூன்றாமாண்டு மாணவர் N.விஜயமணி மே மற்றும் ஜூன் மாதங்களில் குஜராத் சர்தார் பட்டேல் பல்கலைக்கழகத்தில் தான் மேற்கொண்ட கோடைக்கால ஆராய்ச்சி பற்றிய கட்டுரை சமர்ப்பித்தார்.

20.07.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற 'Thursday Meet' மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வரவேற்புரை, திருக்குறளும் அதன் தெளிவுரையும், இயற்பியல் விதி பற்றிய சொற்பொழிவு, இயற்பியல் தொடர்பான Connections, வினாடிவினா, Jumbled Words, அறிவியல் அறிஞர் ஸ்டீவன் ஹாகின்ஸ் பற்றி சொற்பொழிவு, நன்றியுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பு ஆகிய அனைத்து நிகழ்வுகளையும் இரண்டாமாண்டு மாணவர்கள் சிறப்பாக நிகழ்த்தினர்.

27.07.2017 அன்று முன்னாள் இந்தியக் குடியரசுத்தலைவர் பாரத்ரத்னா டாக்டர் A.P.J.அப்துல்கலாம் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவுநாளையொட்டி இயற்பியல்துறை சார்பாக சிறப்பு Thursday Meet ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்றது. மூன்றாமாண்டு மாணவர்களால் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் கலாமின் வாழ்க்கை குறித்த சொற்பொழிவு, கவிதை மற்றும் ஒலி-ஒளிக் காட்சி ஆகியவை இடம்பெற்றன.

28.07.2017 அன்று இயற்பியல்துறையில் முதுகலை (M.Sc Phy) பாடவகுப்புகள் துவங்கின.

**வேதியியல் துறை**

01.07.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் வேதியியல் துறையின் வேதியியல் கழக துவக்கவிழா நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா தலைமைவகித்து துவக்கவுரை நிகழ்த்தினர். செயலர் சுவாமி நியமானந்த ஆசியுரை வழங்கினார். கல்லூரியின் முன்னாள் மாணவரும் ஹைதராபாத் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மாணவருமான முனைவர் B.சங்கர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'Design and Synthesis of Rhenium (I) based Metalocycles' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். மற்றொரு சிறப்பு விருந்தினரான மதுரை காமராசர் பல்கலைக்கழக கனிமவேதியில்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் S.சிவக்குமார், 'Biomarkers for Brain Imaging form Novel Heterocycles' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். உதவிப்பேராசிரியர் A.கண்ணன் நன்றியுரை வழங்கினார்.

07.07.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற சர்வதேச அளவிலான விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் உதவிப்பேராசிரியர் முனைவர் D.திருப்பதி பங்கேற்பாளர்களை வரவேற்று பேசினார். கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா தலைமையுரையாற்றினார். கல்லூரி செயலர் சுவாமி நியமானந்த ஆசியுரை வழங்கினார். போர்ச்சுக்கல் International Iberian Nanotechnology Laboratoryன் மேரி க்யூரி முனைவர்பட்ட ஆய்வாளர் முனைவர் N.வாசிமலை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உதவிப்பேராசிரியர் G.பாலகிருஷ்ணன் நன்றியுரை வழங்கினார்.

07.07.2017 அன்று மதுரை, அமெரிக்கன் கல்லூரியின் தேர்வுக்கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தில் நடைபெற்ற பருவத்தேர்வுகள் தொடர்பான பணியில் உதவிப்பேராசிரியர் முனைவர் M.கணபதி கலந்துகொண்டார்.

10.07.2017 அன்று மதுரை, தியாகராஜர் கல்லூரியின் தேர்வுக்கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தில் நடைபெற்ற தேர்வுகள் தொடர்பான பணியில் உதவிப்பேராசிரியர் A.கண்ணன் கலந்துகொண்டார்.

15.07.2017 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் வேதியியல்துறையின் ஒருநாள் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. 'Carreer Opportunities in Pharma Industry – மருந்துத் துறையில் வேலைவாய்ப்பு' என்ற தலைப்பிலான கருத்தரங்கின் துவக்கவிழாவில் துறைத்தலைவர் B.சேர்வாரமுத்து வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா தலைமையுரை மற்றும் துவக்கவுரை நிகழ்த்தினர். கல்லூரி செயலர் சுவாமி நியமானந்த ஆசியுரை வழங்கினார். மதுரை, பார்மாபேப்ரிகான் மருந்து நிறுவன மேலாண்மை பங்குதாரர் திரு.P.பொன்ராஜன் விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உதவிப்பேராசிரியர் A.கண்ணன் நன்றியுரை வழங்கினார். பிற்பகல் நிகழ்ச்சிகளில் மதுரை, பார்மாபேப்ரிகான் மருந்து நிறுவன தர உத்தரவாத மேலாளர் திரு.R.பாலமுருகன், பெங்களூரு, சிப்லா மருந்து நிறுவன மேலாளர் திரு.K.முரளிதரன், புனே, சின்சன் மருந்து நிறுவன விற்பனை மேலாளர் திரு.M.கார்த்திக் மற்றும் புதுதில்லி, DHR Holding India நிறுவன விற்பனை மேலாளர் திரு.M.S.முரளிகிருஷ்ணன்

ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டு மருந்து நிறுவனங்களில் வேதியியல் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு குறித்து உரையாற்றினர் மேலும் மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர். அதனைத்தொடர்ந்து நடைபெற்ற நிறைவு விழாவில் கல்லூரி துணைமுதல்வர் முனைவர் T.வெங்கடேசன் கலந்துகொண்டு நிறைவுரை ஆற்றினார்.

19.07.2017 அன்று கோயமுத்தூர், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வேதியியல் துறையில் நடைபெற்ற விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் (Guest Lecture Programme) பேராசிரியர் B.சேர்வாரமுத்து சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'வேதியியல் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகள்' என்ற தலைப்பில் மாணவர்களிடையே உரையாற்றினார்.

21.07.2017 அன்று இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் 52பேர் உதவிப்பேராசிரியர் G.பாலகிருஷ்ணன் தலைமையில் விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ள ராம்கோ சிமெண்ட் தொழிற்சாலையைப் பார்வையிட்டு சிமெண்ட் தயாரிப்பது பற்றிய விவரங்களைக் கற்றறிந்தனர்.

25.07.2017 அன்று இளங்கலை மூன்றாமாண்டு மற்றும் முதுகலை மாணவர்கள் 54பேர் பேராசிரியர்கள் நால்வருடன் திருநெல்வேலி கூடங்குளம் அணுமின் நிலையத்தினை பார்வையிட்டு மின்உற்பத்திக்கான பல்வேறு செயல்பாடுகளை விளக்கமாகக் கேட்டறிந்தனர்.

**தாவரவியல் துறை**

17.07.2017 மற்றும் 18.07.2017 ஆகிய இரண்டு நாட்கள் கோயமுத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் துறையில் நடைபெற்ற 'Biodiversity and Its Conservation' என்ற தலைப்பிலான பயிற்சிப்பட்டறையில் உதவிப்பேராசிரியர் முனைவர் V.ரமேஷ் கலந்துகொண்டு பயிற்சிபெற்றார்.

21.07.2017 அன்று சென்னை, மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலில் நடைபெற்ற மேல்நிலைப் பள்ளிகளின் உயிரியல் பாடத்திட்ட உருவாக்கம் தொடர்பான தேசிய அளவிலான குழுவிவாதத்தில் துறைத்தலைவர் முனைவர் N.லட்சுமணன் தாவரவியல்பாட நிபுணராகக் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை எடுத்துரைத்தார்.

29.07.2017 அன்று உதவிப்பேராசிரியர் செ.சௌந்தர்ராசு மற்றும் மூன்றாமாண்டு மாணவர்கள் 5பேர் மதுரை, தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற National Innovation Foundation மற்றும் SEVA அமைப்பு இணைந்து நடத்திய Grassroots Innovation Workshop Cum Exhibition என்ற தலைப்பிலான பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டனர்.

**விலங்கியல் துறை**

03.07.2017 முதல் 06.07.2017 வரையிலான நாட்களில் சென்னை தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தில் நடைபெற்ற தேர்வுத்தாள் தயாரிப்பது தொடர்பான சிறப்புப் பணியில் இணைப்பேராசிரியர் முனைவர் E.ஜெயக்குமார் கலந்துகொண்டார்.

03.07.2017 முதல் 06.07.2017 வரையிலான நாட்களில் சென்னை தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தில் நடைபெற்ற தேர்வுத்தாள் தயாரிப்பது தொடர்பான சிறப்புப் பணியில் இணைப்பேராசிரியர் முனைவர் M.சண்முகவேலு கலந்துகொண்டார்.

07.07.2017 அன்று விருதுநகர் V.V.வன்னியபெருமாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற உயிரிவேதியியல் மன்ற துவக்கவிழாவில் இணைப்பேராசிரியர் V.பார்த்தசாரதி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'Bright Fields and Pitfalls in Biology' என்ற தலைப்பில் துவக்கவிழா உரை நிகழ்த்தினார்.

13.07.2017 அன்று சிவகங்கை, பண்ணை பொறியியல் கல்லூரியில் 'ராஷ்டிரிய மத்யமிக் சிக்ஷா அபியான்' திட்டத்தின் கீழ் நடைபெற்ற பள்ளி இளநிலை ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாமில் இணைப்பேராசிரியர் V.பார்த்தசாரதி, விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

15.07.2017 அன்று இளங்கலை மற்றும் முதுகலை விலங்கியல்துறை மாணவர்கள் 78பேர் மதுரை அழகர்மலைக்கு கல்விச்சுற்றுலாவிற்காக அழைத்துச்செல்லப்பட்டனர்.

19.07.2017 அன்று காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் தேர்வுக்கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தில் நடைபெற்ற வினாத்தாள் சரிபார்த்தல் பணியில் இணைப்பேராசிரியர் முனைவர் M.சண்முகவேலு கலந்துகொண்டார்.

21.07.2017 அன்று சென்னை, மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலில் நடைபெற்ற மேல்நிலைப் பள்ளிகளின் உயிரியல் பாடத்திட்ட உருவாக்கம் தொடர்பான தேசிய அளவிலான குழுவிவாதத்தில் துறைத்தலைவர் முனைவர் P.ராஜேந்திரன் விலங்கியியல்பாட நிபுணராகக் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை எடுத்துரைத்தார்.

29.07.2017 அன்று உதவிப்பேராசிரியர் T.ரமேஷ் மற்றும் மூன்றாமாண்டு மாணவர்கள் 5பேர் மதுரை, தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற National Innovation Foundation மற்றும் SEVA அமைப்பு இணைந்து நடத்திய Grassroots Innovation Workshop Cum Exhibition என்ற தலைப்பிலான பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டனர்.

**வணிகவியல் கணினிப்பயன்பாடு துறை**

22.07.2017 அன்று இரண்டாமாண்டு வணிகவியல் கணினிப் பயன்பாட்டுத்துறை மாணவர்கள் 29பேர் துறைப்பேராசிரியர் R.கார்த்திகேயன் தலைமையில் காந்திகிராமம், காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று அங்குள்ள வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் சித்த மருத்துவத் தயாரிப்பு நிறுவனங்களைப் பார்வையிட்டனர்.

01.07.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் ஆளுமைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. Weekly News Bulletin (ஆங்கிலம், ஹிந்தி), வணிக வினாடி-வினா, Who Am I?, கட்டுரை வாசித்தல், ஆவணப்படம் தயாரித்து வெளியிடல், வரவேற்புரையும், நன்றியுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பு ஆகிய நிகழ்வுகள் மாணவர்களால்

நிகழ்த்தப்பட்டன. ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் S.பாரதிராஜா இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்.

07.07.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற ஆளுமைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வரவேற்புரை, Weekly News Bulletin (ஆங்கிலம், ஹிந்தி) வணிக வினாடி-வினா, Who Am I?, கட்டுரை வாசித்தல், ஆவணப்படம் வெளியிடல், நன்றியுரை ஆகிய நிகழ்வுகளை மாணவர்கள் மிகச்சிறப்பாக நிகழ்த்தினர். இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக கணினிஅறிவியல்துறை உதவிப்பேராசிரியர் G.பாலாஜி கலந்துகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்.

21.07.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் ஆளுமைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. வரவேற்புரை, நன்றியுரையுடன் பிற நிகழ்வுகளான Weekly News Bulletin, வணிக வினாடி-வினா, Who Am I?, கட்டுரை வாசித்தல், ஆவணப்படம் வெளியிடல் ஆகியவற்றில் மாணவர்கள் கலந்துகொண்டு சிறப்பாக பங்காற்றினர்.

28.07.2017 அன்று திண்டுக்கல் A.R.மேலாண்மை கல்லூரியில் நடைபெற்ற தொழில்முனைவோர் மேம்பாடு குறித்த ஒருநாள் பயிற்சிப்பட்டறையில் இரண்டாமாண்டு மற்றும் மூன்றாமாண்டு மாணவர்கள் 8 பேர் உதவிப்பேராசிரியர் R.கார்த்திகேயன் உடன் சென்று கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

28.07.2017 அன்று ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற ஆளுமைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வரவேற்புரை, Weekly News Bulletin, வணிக வினாடி-வினா, Who Am I?, கட்டுரை வாசித்தல், ஆவணப்படம் வெளியிடல் மற்றும் நன்றியுரை ஆகியன மாணவர்களால் மிகச்சிறப்பாக வழங்கப்பட்டன.

29.07.2017 அன்று முதலாமாண்டு மாணவர்கள் 48பேர் உதவிப்பேராசிரியர்கள் K.B.ராஜா மற்றும் C.சுந்தரம் தலைமையில் மதுரை ஆவின்பால் நிறுவனத்திற்குச் சென்று பார்வையிட்டனர். அங்கு பால் பதனிடுதல், பால்பொருட்கள் உற்பத்தி மற்றும் பல செயல்பாடுகள் குறித்து கேட்டு அறிந்தனர்.

**கணினிஅறிவியல் துறை**

13.07.2017 அன்று காலை 9.40 மணிமுதல் 12.40 மணிவரை Guest Lecture Programme நடைபெற்றது. விருதுநகர், செந்திக்குமார நாடார் கல்லூரியின் கணினிஅறிவியல் துறைத்தலைவர் முனைவர் T.கதிர்வளவக்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'Pattern Recognition' என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கணினிஅறிவியல்துறை ஒருங்கிணைப்பாளர் திரு A.சதீஷ்பாபு வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா தலைமையுரையும், துணைமுதல்வர் T.வெங்கடேசன் வாழ்த்துரையும் வழங்கினர். உதவிப்பேராசிரியர் திரு.R.கிருஷ்ணசாமி நன்றியுரை வழங்கினார்.

15.07.2017 அன்று 'Software Skills Development Programme' மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி வணிகவியல்துறையின் MultiMedia Hallல் நடைபெற்றது. மூன்றாமாண்டு மாணவர்களால் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் கட்டுரை சமர்ப்பித்தல், Weekly News, கணினிஅறிவியல் சம்பந்தமான வினாடிவினா, Identify the Personality ஆகிய நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன. இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக இந்திய தத்துவவியல்துறைத் தலைவர் பேராசிரியர் C.R.அனந்தராமன் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

21.07.2017 அன்று நடைபெற்ற 'Software Skills Development Programme' மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வரவேற்புரை, கட்டுரை வாசித்தல், Weekly News, வினாடிவினா, Debugging, Identify the Personality, நிகழ்ச்சி தொகுப்பு, நன்றியுரை ஆகிய அனைத்தும் மாணவர்களால் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கல்லூரியின் நூலகர் M.பிரபாகரன் கலந்துகொண்டு பங்கேற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

**ஆங்கிலத்துறை**

Socrates என்ற சர்வதேச பத்திரிக்கையின் ஜுலை மாதப் பதிப்பில் உதவிப்பேராசிரியர் முனைவர் P.சரவணக்குமாரின் "Use of Mask in Girish Kamad's Play - Tughlaq" என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரை பிரசுரமானது.

சர்வதேச பத்திரிக்கையின் ஜுலை மாதப் பதிப்பில் உதவிப்பேராசிரியர் முனைவர் K.பாரதிராஜின் "Encapsulation of Paradigm and Sterotype in Breast Stories and Ladies Coupe: A Study of Mahasweta Devi an Anita Nair on Pure Research" என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டது.

26.07.2017 அன்று மதுரை அமெரிக்கன் கல்லூரியின் ஆங்கிலத்துறையில் நடைபெற்ற "English Language and Literature and Lnguistics" என்ற தலைப்பிலான சர்வதேசக் கருத்தரங்கில் துறைத்தலைவர் P.குமரேசன் மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர் S.பாரதிராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் முனைவர் S.பாரதிராஜா "St. Don Bosco and Swami Vivekananda as Rhetoricians: A Study of Selected Works" என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.

**சமஸ்கிருதத்துறை**

08.07.2017 அன்று பிற்பகல் 2.00 மணிமுதல் 4.00மணி வரை சமஸ்கிருதத்துறை மற்றும் இந்திய தத்துவவியல்துறை இணைந்து ஏற்பாடு செய்த விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சி (Guest Lecture Programme) நடைபெற்றது. இதில் கொல்கத்தா ஸ்ரீ விவேகானந்த பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர் சுஸந்த பட்டாச்சார்யா 'யோகா – இந்தியாவின் ஆத்மீகப் பாரம்பரியம்' என்ற தலைப்பில் யோகாசனத்தின் சிறப்புகள் குறித்து சிறப்புரையாற்றினார். இந்தியத் தத்துவவியல் துறைத்தலைவர் பேராசிரியர் C.R.அனந்தராமன் வாழ்த்துரை வழங்கினார்.

01.07.2017 அன்று இந்தியத் தத்துவவியல் துறையின் இந்தியக்கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் என்ற பட்டய மற்றும் முதுநிலை பட்டய வகுப்புகளுக்கான துவக்கவிழா நிகழ்ச்சி கல்லூரியின் பிரார்த்தனைக்கூடத்தில் நடைபெற்றது.

**உடற்கல்வித்துறை**

20.07.2017 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கிடையே தடகள மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது குறித்த ‘B’ மண்டல கல்லூரி உடற்கல்வி இயக்குநர்களுக்கான பொதுக்குழுக் கூட்டத்தில் உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் கலந்துகொண்டார்.

**நூலகத் துறை**

07.07.2017 மற்றும் 08.07.2017 ஆகிய இரண்டு நாட்கள் மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற ‘Role of Libraries in Making Digital India’ என்ற தலைப்பிலான தேசிய அளவிலான கருத்தரங்கில் கல்லூரி நூலகர் முனைவர் M.பிரபாகரன் கலந்துகொண்டார்.

**NSS/NCC/அப்பர் உழவாரப்பணிக் குழு**

02.07.2017 அன்று வாடிப்பட்டி, பொன்பெருமாள் மலையில் நடைபெற்ற நாட்டு நலப்பணித் திட்ட அணி எண் 75ன் ஒருநாள் சிறப்பு முகாமில் திட்ட அலுவலர் முனைவர் க.செல்லப்பாண்டியன் மற்றும் பேராசிரியர் N.தினகரன் மேற்பார்வையில் மாணவர்கள் 45 பேர் ஸ்ரீஜெயவீர ஆஞ்சனேயர் கோயிலின் வருஷாபிஷேகத்திற்கான முன்னேற்பாடுகளை சிறப்பாக செய்தனர்.

05.07.2017 அன்று திண்டுக்கல் தேசிய மாணவர் படை அலுவலகத்தில் வருடாந்திர பயிற்சி கருத்தரங்கில் தேசிய மாணவர் படை அலுவலர் லெப்டினென்ட் V.ராஜேந்திரன் கலந்துகொண்டார்.

06.07.2017 முதல் 17.07.2017 வரை வல்லம், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புதுதில்லை, தரைப்படை அணிவகுப்பு முகாமில் கலந்துகொள்வதற்கான நான்காம்நிலை தேர்வு முகாமில் M.வனராஜா (II CS) மற்றும் M.அதிமன்னன் (II Bot) கலந்துகொண்டனர். இதில் M.வனராஜா அடுத்தநிலை முகாமில் கலந்துகொள்ள தேர்வுபெற்றார்.

09.07.2017 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நாட்டு நலப்பணித் திட்ட ஒருநாள் சிறப்பு முகாமில் அணி எண் 78ன் திட்ட அலுவலர் திரு.M.P.குமரேசன், உதவிப்பேராசிரியர்கள் M.ரகு, M.பிரேமானந்தம் ஆகியோர் மேற்பார்வையில் 52மாணவர்கள் கலந்துகொண்டு கல்லூரி வளாகத்தில் பல்வேறு தூய்மைப்பணிகளை மேற்கொண்டனர்.

09.07.2017 அன்று வாடிப்பட்டி பொன்பெருமாள்மலை ஸ்ரீஜெயவீர சஞ்சீவி ஆஞ்சனேயர் ஆலயத்தின் முதலாவது வருஷாபிஷேகத்தினை முன்னிட்டு மூன்றாமாண்டு அப்பர் உழவாரப் பணிக்குழு மாணவர்கள் 114பேர் கலந்துகொண்டு பூஜை மற்றும் அன்னதான வழங்குதலில் உதவிபுரிந்தனர்.

13.07.2017 முதல் 23.07.2017 வரை வல்லம் பெரியார் மணியம்மை பல்கழகத்தில் நடைபெற்ற தேசிய மாணவர் படையின் BLC முகாமில் M.அருள்மொழித்தேவன் (II Mat), J.வெங்கடேசன் (II CS) ஆகிய இரு மாணவர்கள் கலந்துகொண்டனர்.

16.07.2017 அன்று திருச்சி மாவட்டம், திருப்பராய்த்துறை அருள்மிகு தாருகாவனேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற நாட்டு நலப்பணித் திட்ட ஒருநாள் சிறப்பு முகாமில் நாட்டு நலப்பணித் திட்ட அணிஎண் 75ஐச் சேர்ந்த இரண்டாமாண்டு தன்னார்வலர்கள் 68பேர் திட்ட அலுவலர் K.காமாட்சி தலைமையில் கலந்துகொண்டு கோயில் வளாகத்தின் உள்ளும் புறமும் தூய்மைப்படுத்தும் பணியினை மேற்கொண்டனர்.

16.07.2017 முதல் 26.07.2017 வரை சிவகங்கை மாவட்டம் இடையபட்டி, தேசிய மாணவர் படை பயிற்சி கல்லூரியில் நடைபெற்ற புதுதில்லி, தரைப்படை அணிவகுப்பு முகாமில் கலந்துகொள்வதற்கான ஐந்தாம்நிலைத் தேர்வு முகாமில் கலந்துகொண்டார்.

23.07.2017 அன்று இராமேஸ்வரம், ஸ்ரீராமகிருஷ்ண ஆஸ்ரமத்தில் நடைபெற்ற ஆடி அமாவாசை சிறப்பு அன்னதான நிகழ்ச்சியில் வணிகவியல்துறை உதவிப்பேராசிரியர் சு.மோகன்ராஜ் மேற்பார்வையில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் 23 பேர் கலந்துகொண்டு அன்னதான சேவை புரிந்தனர்.

23.07.2017 அன்று கல்லூரி வளாத்தில் நடைபெற்ற நாட்டு நலப்பணித் திட்ட ஒருநாள் சிறப்பு முகாமில் அணிஎண் 77ஐச் சேர்ந்த 46 மாணவர்கள் திட்ட அலுவலர் முனைவர் T.செல்லதுரை மற்றும் பேராசிரியர் G.ராஜ்குமார் மேற்பார்வையில் உள்விளையாட்டு அரங்கத்தின் உள்ளும் புறமும் தூய்மை செய்யும் பணிகளை மேற்கொண்டனர்.

23.07.2017 அன்று புதுக்கோட்டை மாவட்டம், திருப்புனவாசல் ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயா மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற ஸ்ரீராமகிருஷ்ண தபோவன பவளவிழாக் கொண்டாட்டத்தில் தேசிய மாணவர் படை மாணவர்கள் 50 பேர் கலந்துகொண்டு பல்வேறு சேவைகள் புரிந்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா மற்றும் தேசிய மாணவர் படை அலுவலர் திரு.V.ராஜேந்திரன் ஆகியோர் உடன் சென்றனர்.

30.07.2017 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நாட்டு நலப்பணித்திட்ட ஒருநாள் சிறப்பு முகாமில் அணிஎண் 76ன் திட்ட அலுவலர் முனைவர் S.சந்திரசேகரன் மற்றும் பேராசிரியர் முனைவர் K.ரமேஷ்குமார் மேற்பார்வையில் 50 மாணவர்கள் பல்வேறு பணிகளை மேற்கொண்டனர்.

**இளைஞர் செஞ்சிலுவை சங்கம்**

21.07.2017 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் இளைஞர் நலக்கல்வித் துறையில் நடைபெற்ற பல்கலைக்கழக துணைவேந்தருடனான இளைஞர் செஞ்சிலுவைச் சங்க செயல் அலுவலர்கள் கூட்டத்தில் நமது

கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்க செயல் அலுவலரும் மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான முனைவர் பொன்.பட்டினத்தார் கலந்துகொண்டார்.

28.07.2017 அன்று கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பாக சோழவந்தான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற மருத்துவமனைகள் தத்தெடுப்பு நிகழ்ச்சியில் சங்க செயல் அலுவலர்

**கலை இலக்கிய மன்றம்**

10.07.2017 அன்று விருதுநகர், செந்திக்குமாரநாடார் கல்லூரியில் நடைபெற்ற தமிழக முன்னாள் முதல்வர் காமராசரின் 115ஆவது பிறந்தநாள் விழா சிறப்பு இலக்கியப் போட்டிகளில் V.அருண் (II Che) பேச்சுப் போட்டியிலும், M.பவித்ரன் (II Che) கவிதைப் போட்டியிலும் கலந்துகொண்டனர். இதில் ஆ.பவித்ரன் இரண்டாம் இடம் பிடித்து ரூ.3000/- ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ் வென்றார்.

21.07.2017 அன்று திருமங்கலம், அன்னை பாத்திமா கல்லூரியில் நடைபெற்ற தமிழக முன்னாள் முதல்வர் காமராசரின் 115ஆவது பிறந்தநாள் விழா பேச்சுப்போட்டியில் V.சக்தீஸ்வரன் (II Eng), V.அருண் (II Che) கலந்துகொண்டனர்.

30.07.2017அன்று மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் ஸ்ரீராம் நிதி நிறுவனம் சார்பில் நடைபெற்ற பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டியில் மூன்று மாணவர்கள் கலந்துகொண்டனர். ஓவியப்போட்டியில் M.அனீஷ் (II Che) மற்றும் முத்துமாணிக்கம் (III B.Com) முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளை வென்றனர்.

**பாரதி சிந்தனை அரங்கம்**

13.07.2017 அன்று மாலை 6.30 மணி முதல் 8.00 மணிவரை பாரதி சிந்தனை அரங்கத்தின் சார்பாக தமிழக கல்வி மேம்பாட்டு தினமான தமிழக முன்னாள் முதல்வர் காமராசரின் பிறந்தநாள் ‘பெருந்தலைவர் காமராசரின் நிலைத்த புகழுக்குக் காரணம்: கல்விப்பணியா? சமுதாயப்பணியா?’ என்ற தலைப்பிலான சிறப்பு பட்டிமன்றத்துடன் கொண்டாடப்பட்டது. வரலாற்றுத்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இரு அணிகள் சார்பாக வாதிட்டனர். தேவகோட்டை, சேவுகன் அண்ணாமலை கல்லூரிப் பேராசிரியர் இரா.பாகை கண்ணதாசன் நடுவராகப் பங்கேற்றார். பாரதி சிந்தனை அரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கு.இராமர் அறிமுகவுரை நிகழ்த்தினார். கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா முன்னிலை வகித்ததுடன் பங்கேற்பாளர்களுக்கும் நடுவருக்கும் நினைவுப்பரிசு வழங்கி பாராட்டினார். துணைமுதல்வர் முனைவர் T.வெங்கடேசன் நன்றியுரை வழங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வ.க.இராமகிருஷ்ணன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

**குருதிக்கொடை**

24.07.2017 அன்று மூன்றாமாண்டு வணிகவியல் மாணவர்கள் J.பொன்ராஜ் மற்றும் P.பிரபு மதுரை, ராஜாஜி அரசு மருத்துவமனையில் இரத்ததானம் செய்தனர்.

**திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண தபோவன பவள விழா**

நமது கல்லூரி மற்றும் பல்வேறு கல்வி நிலையங்களின் தலைமையகமான திருச்சி மாவட்டம், திருப்பராய்த்துறை, ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தின் 75ஆம் ஆண்டு பவள விழா தபோவனக் கிளை நிறுவனங்களில் ஒவ்வொன்றாகக் கடந்த ஒரு வருடமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் நிறைவு விழா ஆகஸ்ட் 17, 18, 19 மற்றும் 20 ஆகிய நாட்களில் திருப்பராய்த்துறை, ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட உள்ளது. இவ்விழாவில் பெற்றோர் அனைவரும் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். கலந்துகொள்ளும் பெற்றோர் அனைவருக்கும் உணவு மற்றும் தங்கும் வசதி செய்து தரப்படும்.

**கல்லூரி விடுமுறை மற்றும் திறக்கும் நாள்**

12.08.2017 அன்று பிற்பகல் மாணவர்கள் அனைவரும் இடைப்பருவ விடுமுறைக்காக தத்தமது ஊர்களுக்குச் செல்கிறார்கள். கல்லூரி மீண்டும் 18.01.2017 அன்று திறக்கப்பட உள்ளது. முதலாமாண்டு மாணவர்கள் 17.01.2017 புதன்கிழமையன்று மாலை 6.00 மணிக்குள்ளும், மற்ற மாணவர்கள் 8.00 மணிக்குள் கல்லூரிக்கு வந்துவிடவேண்டும். அன்றைய இரவு உணவை மாணவர்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

மாணவர்களின் ஆங்கிலப் புலமையை மேம்படுத்த மாணவர்கள் விடுமுறை நாட்களில் தினசரி நிகழ்வுகளை ஆங்கிலத்தில், 200 வார்த்தைகளில் அனைத்து நாட்களுக்கும் எழுதி பெற்றோரிடம் அன்றாடம் கையொப்பம் பெற்றுவரவேண்டும்.

மாணவர்கள் வீட்டிற்குச் சென்றவுடனும், வீட்டிலிருந்து கல்லூரிக்குத் திரும்பும் போதும் தாய் தந்தையர் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்று வரவேண்டும்.

**2017 ஜூலை மாதத்திற்கான கட்டண விவரம்**

உணவுக்கட்டணம் நாள் ஒன்றுக்கு ரூ.90/-

இரண்டாமாண்டு இயற்பியல் மாணவர்களுக்கு புத்தகம் வழங்கியது ரூ.650/-

முதலாமாண்டு இயற்பியல் மாணவர்களுக்கு செய்முறை நோட்டுப்புத்தகம் வழங்கியது ரூ.195/-

முதலாமாண்டு கணிதவியல் மாணவர்களுக்கு இயற்பியல் துணைப்பாட புத்தகம் வழங்கியது ரூ.180/-

முதலாமாண்டு வேதியியல் மாணவர்களுக்கு இயற்பியல் துணைப்பாட புத்தகம் வழங்கியது ரூ.180/-

முதலாமாண்டு மாணவர்கள் அனைவருக்கும் Side Plate வழங்கியது ரூ.30/-

இரண்டாமாண்டு IGNOU (CAFE) மாணவர்களுக்கான போதனைக்கட்டணம் ரூ.1700/-
மூன்றாமாண்டு IGNOU (CIS) மாணவர்களுக்கான போதனைக்கட்டணம் ரூ.3700/-
**இளங்கலை மாணவர்கள் அனைவருக்கும் சுற்றுச்சூழலியல் கல்வி புத்தகம் வழங்கியது நீக்கிவிடவும்**

அன்பும் நமஸ்காரமும்

இடம்: திருவேடகம் மேற்கு **முனைவர் சி.இராஜா**
நாள்: 04.07.2017 முதல்வர்